திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டத்திலேதான் நான் அறிந்தவரையில் இன்னமும் அந்தப் பள்ளி இருக்கிறது. சுந்தரதாஸ் சத்திரத்தை விட்டு மாற்றப்படவில்லை. ஆனுல் மாற்றியாகிவிட்டது என்று அமைச்சர் கூறுகிருர்கள். எந்தந்த் தேதியில் மாற்றப்பட்டது என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மதுரை மாவட்டத்தின் ஆட்சியாளர் திரந்தரக் கட்டிடத்தில் உயர்நிலைப் பள்ளி இருப்பதாகவும், தற்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளி உயர்நிலைப் பள்ளி நடைபெறும் கட்டடத்திற்குச் சென்றிருப்பதாகவும் சொல்லியிருக்கிருர்கள். எந்தத் தேதியில் என்ற விவரம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தில் உயர்நிலைப் பள்ளி நடைபெறுகிறது; உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்குப் போகவில்லை. சுந்தரதாஸ் சத்திரத்தில்தான் நடக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி மாற்றப்படவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? கொண்டு வரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை 10—3—1970-ல் கொடுத்தார்கள். அப்போதுள்ள நிலையில் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது உறுப்பினர் சொல்வதை வைத்து விசாரணை செய்கிறேன்.

நெருஞ்சிக்குடி ஆற்றின் குறுக்கே பாலம்

*334 வினு— புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியில் பனையப்பட்டி, பனையூர், குடிமங்கலம் பகுதிகளிலிருந்து இராராபுரம், கூடலூர்ப் பகுதிகளுக்குச் சென்று வரத்தக்க அளவில் எக்காலத்தும் போக்குவரத்திற்கேற்ப கூடலூர் ஆற்றின் (நெருஞ்சிக்குடி ஆறு) குறுக்கே பாலமொன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கீழ் ராதாம்பூருக்கு அருகில் மணவாய்க்காலின் குறுக்கே பாலம்

*335 வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, காட்டுமன்னர் கோவில் யூனியனைச் சேர்ந்த கீழ் ராதாம்பூர் கிராமத்துக்கு அருகில் உள்ள மணவாய்க்காலில் வண்டி வாகனங்கள் செல்லும் அளவுக்கு ஒரு பாலம் அமைத்துத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?